விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 12 செவ்வாய்க்கிழமை (26.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158




# வடக்கில் 11 வருடங்களின் பின் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## ஆகஸ்ட் 8இல் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

11 வருடங்களின் பின் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இத் தேர்தலுக்கு எதிர்வரும் யூன் மாதம் 17ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு நிலை திரும்பியதும் ஈழ அகதிகள் அனுப்பப்படுவர்!

### சிதம்பரம் பேட்டி



(புதுடில்லி)

இலங்கையில் சகஜ நிலை திரும்பியதும் தமிழ் நாட்டில் உள்ள அகதிகள் இலங்கைக்கு திரும்பிச் செல்லுமாறு கோரப்படுவார்கள் என்று இந்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவையில் மீண்டும் உள்துறை அமைச்சராக நேற்று பொறுப்பேற்றுக் கொண்ட சிதம்பரம்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மக்களின் எதிர்பார்ப்புக்கள் முட்கம்பிகளுக்குள் முடக்கம்

### த ரைம்ஸ் விபரிப்பு

(நியூயோர்க்)

முகாம் மக்களின் எதிர்பார்ப்புக்கள் முறியடிக்கப்பட்டு முட்கம்பிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என 'த ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. உலகிலேயே மிகப்பெரிய தடுப்பு முகாம்களில் ஒன்றான வவுனியா மனிக்பாம் முகாமில் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது எதிர்பார்ப்புகள் தகர்க்கப்பட்டு முட்கம்பிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 'த ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

தாம் திறந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## கனரக ஆயுதப் பாவனைக்கான சான்றுகள் எதனையும் காணவில்லை

### பான் கீ மூன் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கான பயணத்தின்போது இறுதியாக மோதல் நடைபெற்ற பகுதியை உலங்கு வானூர்தியில் இருந்து பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூன், அப்பகுதியில் கனரக ஆயுதங்களின் பாவனைக்கான தெளிவான சான்றுகளை காணவில்லை எனத் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அமெரிக்காவில் இருந்து ஒளிபரப்பாகும் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் கூறியிருப்பதாவது,

இறுதியாக (12ஆம் பக்கம் பார்க்க)

## பத்மநாதனை கைது செய்ய உதவுமாறு ஐ.நா. செயலரிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதனை கைது செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உதவ வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வீதித் தடைகளை அகற்றி மக்களை சுதந்திரமாக நடமாட அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என பான் கீ மூன் ஜனாதிபதியை கேட்டிருந்தார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சங்களால் தான் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவை உடனடியாக நீக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்திருந்தார். மேலும் விடுதலைப் புலிகளின் அனைத்துலக

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று (12ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2

## இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானும் இணைவு

(புதுடில்லி)

தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட போர்க் குற்றச் செயல்கள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து செயற்படுகின்றன என்று இந்திய ஊடகமான ஐ.ஏ.என்.எஸ். தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட போர்க் குற்றச் செயல்கள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவும் பாகிஸ்தானும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பத்தாயிரம் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடம் சரண்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2 ஆண்டுகளாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவத்துக்கு தொடர் வெற்றி கிடைத்தது. இது விடுதலைப் புலிகளின் முன் கள வீரர்களிடம் கடும் சோர்வை ஏற்படுத்தி விட்டது. இதனால் அவர்கள் சரணடையத் தொடங்கினர். மோதல் தீவிரமான போது (12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

**உங்கள் கதைகளை கேளுங்கள்**

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

# இந்திய அரசாங்கம் மறுத்த நிலையில் சீனாவிடமிருந்து ஆயுதக் கொள்வனவு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல்களின் போது ஆயுதங்களை வழங்க இந்தியா மறுத்ததாலேயே சீனாவிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாரிய விளைவினை ஏற்படுத்தும் ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையில் தாம் இல்லையென இந்தியா கூறிவிட்டது. தொடர்பாடல் சாதனங்களைக் கூட வழங்க முடியாது என அவர்கள் கூறிவிட்டனர்.

இதனாலேயே பாகிஸ்தான், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் உதவியை நாட வேண்டியேற்பட்டதாக இந்திய செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்த ஆயுதங்களிலும் குறிப்பிட்டளவு ஆயுதங்களையே பாகிஸ்தான் வழங்கியதுடன் ரஷ்யா, உக்ரேன் உள்ளிட்ட ஏனைய நாடுகளிலிருந்தும் குறிப்பிட்டளவு ஆயுதங்களே தமக்கு கிடைத்ததுடன் அவை மிகவும் விலையுயர்ந்தவை என்பது தெரியவந்தது.

இதனால் எமக்கு மாற்று வழியிருக்கவில்லை. சீனாவிடமே கனரக ஆயுதங்களை நாங்கள் வாங்கினோம் என சரத் பொன்சேகா தெரிவித்தார். (ச-5)

## தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்விமாணிப் பட்டநெறிக்கு புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டைகளைப் பெற்று அங்கு செல்ல முடியாத நிலையில் உள்ளவர்களும் யாழ்.மத்திய கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்.

இதற்கான அனுமதியை தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவுப் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க வழங்கியுள்ளார் என தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இ.சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ச)

# நலன்புரி முகாமிலுள்ள கர்ப்பிணித்தாய்மாரை உறவினர்களிடம் செல்ல அனுமதியுங்கள்

## ஆனந்தசங்கரி கோரிக்கை

இடம் பெயர்ந்தோர் மத்தியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களினதும் குழந்தை பெற்ற தாய்மார்களினதும் பரிதாப நிலையை அனுதாபத்துடன் பரிசீலித்து அவர்களை குறிப்பிட்ட சிலகாலத்திற்கு வெளியில் செல்ல அனுமதிக்குமாறு இடம் பெயர்ந்தோர் நலனை கவனிக்கும் பொறுப்பில் உள்ள மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

முள்ளிவாய்க்காலில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்படும் வரை அவர்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றி நான் கூறத் தேவையில்லை.

போதிய உணவும் ஓய்வும் இன்றி மிகக் குறுகிய அளவு திரிபோசாவுடன் போசாக்கு இன்றி நலிந்துவாழ்கின்றார்கள்.

தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை முகாமுக்கு வரும் வரை அவர்களால் அணுக முடியவில்லை.

அத்தகையோரில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் எல்லோருக்கும் வடக்கே உறவினர்களும், நண்பர்களும் நிறைய இருக்கின்றனர். நிறைமாத கர்ப்பிணிகள், குழந்தை பெற்றவர்கள், குழந்தைகளுக்கும் 31 நாட்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது நீங்கள் அறியாததல்ல.

இக்கட்டத்தில் அவர்கள் புறக்கணிக்கப்படுவார்களேயானால் பல அசம்பாவிதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே குழந்தை பெற்ற தாய்மார்களையும், நிறைமாத கர்ப்பிணிகளையும் உறவினர் களிடம் அல்லது நண்பர்களிடம் அவர்கள் கையேற்க தயார் எனில் நீங்கள் கணிக்கின்ற குறிப்பிட்ட சிலநாட்களுக்கு அவர்களை கையளிப்பீர்களேயானால் நன்றியுடையவனாக இருப்பேன் என்றுள்ளது. (இ)




வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி முகாமில் உள்ள 5 வயதிற்குட்பட்ட 250 சிறுவர்களுக்கான பால்மா பைக்கற்றுக்களை ஈ.பி.ஆர். எல்.எவ் (பத்மநாபா) கட்சியின் யாழ் . பிராந்திய உறுப்பினர் தோழர் கங்கா தலைமையில் யாழ். அரச அதிபர் க. கணேஷ், திட்டப் பணிப்பாளர் பிரதீபன் ஆகியோரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# மத்திய அமைச்சரவையில் தி.மு.க. பங்கேற்கிறது

மத்திய அமைச்சரவையில் தி.மு.க .பங்கேற்பதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். லோக் சபா தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இலாகா ஒதுக்கீடு தொடர்பாக தி.மு.க., காங்கிரஸ் இடையேயான இழுபறி முடிவுக்கு வந்துள்ளது. இது தொடர்பாக முதல்வர் வெளியிட்ட அறிக்கையில், பிரதமர் மன்மோகன்சிங் தம்முடன் போனில் பேசியதாகவும் தி.மு.க அளித்த அமைச்சர்கள் பட்டியலை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார். மேலும் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததாகவும் கூறினார். இன்று நடைபெறவுள்ள மத்திய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சியில் தி.மு.க. கலந்து கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# நாட்டில் புலிகள் இயக்கம் மீண்டும் துளிர் விடமாட்டாது

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கம் இந் நாட்டில். மீண்டும் துளிர்விடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதாகவும் இவ்வியக்கம் முற்றாக தோற்கடிக்கப்பட்டு விட்டதாகவும் பாதுகாப்பு செயலர் தெரிவித்துள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த 30 வருடங்களில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் பாதுகாப்பு படையினர் மீட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் இயக்கம் சட்டவிரோதமான அமைப்பாகும். எனவே அவ்வமைப்புடன் இயங்கும் துணைக்குழுக்களுக்கு எதிராக சர்வதேச சமூகம் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் இலங்கையில் பணியாற்றிய தொண்டு நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பதை விடுத்து விடுதலைப்புலிகளின் தலைவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டன.

அவ்வமைப்புக்களின் உண்மையான நோக்கங்களை அறிந்து அரசாங்கம் அதற்கு சரியான பதிலடியை கொடுத்து விட்டது. அத்துடன் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலரான தனக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச போர் குற்றம் தொடர்பாக பாதுகாப்பு செயலர் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என அறிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் விடுதலைப் புலிகளின் துணைக் குழுக்களால் விடுக்கப்படும் இவ்வறிக்கைகள் குறித்து நாம் அச்சமடையவில்லை. நாட்டின் ஊடக சுதந்திரத்தைக் கலைக்க நாம் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ச-5)


இவர்களை வாழ்த்துகின்றோம்



N.கிருபானந்தன்
B.A (HONS)



T.தர்மசிறி
B.A (HONS)

இன்று BMICH இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் எமது நண்பர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்வடைய உளமார வாழ்த்துகின்றோம்

அத்திவார நண்பர்கள்
இமையாணன்

(2770)



அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 05 1928

மறைவு 27 04 2009



அமரர் கந்தசாமி கதிராசி

கடந்த 27.04.2009 அன்று பிரான்சில் சிவபதம்அடைந்த எமது குடும்பத் தலைவியின் செய்திகேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் தொடர்பு கொண்டுஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவிப்பதோடு, 27.05.2009 (புதன்கிழமை) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

லிங்கம் ஸ்ரோர்ஸ்,
அச்சுவேலி வடக்கு,
மடத்தடி, அச்சுவேலி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(C-2504)

# இன்று ஒரு தகவல்

## எடைக் குறைப்பு

ஒருவர் சேமிப்புப் பழக்கத்தில் மிகவும் கெட்டிக்காரர். பணத்தைச் சேமித்தார், பொருளைச் சேமித்தார், புகழைச் சேமித்தார். அதுவரைக்கும் சரி.

அதேமாதிரி உடம்பில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். உடம்பு மிகவும் பெருத்துப் போய் விட்டது.

சிலபேர் குண்டாக இருப்பார்கள். கொஞ்சம் உடம்பைக் குறைக்கக்கூடாதா? என்று கேட்டால் இது ஒன்றும் அதிகமில்லை. சாதாரணமாகத்தானே இருக்கிறேன் என்பார்கள்.

உடம்பு பெருத்துக் கொண்டே போனால் அது உண்மையாகவே கவனிக்க வேண்டிய ஒரு விடயம்.

சரி... இதற்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்? உணவுப் பழக்கம், இயந்திர வாழ்க்கை, போதுமான அளவு உடற்பயிற்சி மற்றும் உடல் உழைப்பு இல்லாமை இவையெல்லாம் தான் காரணம்.

அம்மா – அப்பா குண்டாக இருந்தால் குழந்தையும் குண்டாக பிறக்குமா? நூற்றுக்கு 40 பேருக்குத்தான் இப்படி பிறக்கும்.

அதேபோல் பெற்றோர் மெலிவாக இருப்பார்கள். அவர்களில் 10 சதவீதம் பேருக்கு குழந்தை குண்டாக இருக்கிறது.

அதனால் பாரம்பரியத்தை இதற்கு ஒரு முக்கியமான காரணமாகக் கூற முடியாது.

குழந்தை கொழுகொழுவென்று இருப்பதற்காக சில தாய்மார்கள் அடிக்கடி எதையாவது கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். பிரசவ காலத்தில் மருமகளை ஒரே இடத்தில் உட்காரவைத்து விதவிதமாகச் சமைத்துப் போடும் மாமியார்களும் இருக்கிறார்கள்.

இதெல்லாம் நல்லதற்கென்றா நினைக்கின்றீர்கள்? உடம்பு பெருத்து விடும். பிரசவத்துக்கு முன்பும் சரி – பின்பும் சரி எப்பொழுதும் போல் வீட்டு வேலைகளை செய்து கொண்டே இருங்கள். குழந்தைக்குப் பால் கொடுக்கா விட்டாலும் தாய்க்கு எடை கூடும்.

பொதுவாக எடையை குறைப்பதற்கு என்னவழி? முதலில் திடீரென ஒரேநாளில் அதைக் குறைப்பதற்கு முயற்சிக்கக்கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதை வழிக்குக் கொண்டு வர வேண்டும். உணவுக் கட்டுப்பாடு மிக முக்கியம்.

பழம், காய்கறி அதிகமாக சேர்த்துக் கொள்ளலாம். கிழங்கை குறைக்கலாம்.

அரிசி, வாழைப்பழம், கிழங்குவகை, வெண்ணெய், கேக், முந்திரிப்பருப்பு, கிறீம் என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

சாப்பாட்டுக்கு நடுவே நொறுக்குத் தீனி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.

வாரம் ஒரு தடவை சாப்பிடாமல் இருக்கலாம். ஆரம்பத்தில் உடம்பின் எடையை குறைக்கும் போது உடம்பிலுள்ள நீரினளவு குறைய ஆரம்பிக்கும். அதற்கு பின்னர் தான் உடம்பின் எடை குறைய ஆரம்பிக்கும். அந்தச் சமயத்தில் நாம் சேர்த்துக் கொள்ளும் உப்பின் அளவையும் குறைத்து கொள்ள வேண்டும்.

சாப்பிடுவதில் சில நுணுக்கம் இருக்கிறது. செய்து பாருங்கள். மெதுவாக சாப்பிட வேண்டும். இப்படிச் செய்தால் மூளையில் இருக்கும் பசி உணர்வை தூண்டும் இடம், பசியுணர்வை தூண்டாமல் மந்தப்படுத்தும். இதனால் அதிகமாக சாப்பிடுவதற்கு முன்னரே பசி தணிந்து விடும்.

சிலர் உடம்பு இளைப்பதற்கு மருந்து சாப்பிடுவார்கள். அதெல்லாம் பசியை உண்டாக்காது. அதனால் உடம்பு இளைக்கும். மருந்தை நிறுத்தினால் மறுபடியும் பசிக்கும். அதனால் மருந்தைவிட மனக்கட்டுப்பாடுதான் முக்கியம்.

உடம்பை குறைப்பதற்காக ஒருவர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தார். தொந்தியை கரைப்பதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார்.

''தினமும் காலையில் முழங்காலை மடிக்காமல் குனிந்து உங்கள் கால் கட்டை விரலை தொடுங்கள் சரியாகிவிடும்'' என்றேன்.

அதற்கு அவர், "நான் குனிந்து கட்டை விரலை தொடுவதற்கு தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால் எனது கால் கட்டைவிரல் எங்கேயிருக்கிறது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதுதான் கஷ்டமாக இருக்கிறது'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஈராண்டு பகுதிநேர (2007/2009), முழுநேர (2007/2008) பட்டப்பின் கல்விடிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டோர் இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கற்கை நெறிகள் யூன் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

**பகுதி நேரம் - 2007/2009**

திருமதி. எம். அகல்யா, செல்வி ஏ. அங்கயற்கண்ணி, திருமதி. கே. அனுஷியா, செல்வி. கே. பகீரதி தேவி, திருமதி.எஸ். பாமிலா, திருமதி. பி. மதிவதனி, கே. சந்திர மௌலீசன், செல்வி. பி. தேவகி, ஏ. எட்வின் சுமந்திரன்ன், கே. கஜேந்திரன், திருமதி. எஸ். கீதாஞ்சலி, எஸ். ஞானச் செல்வன், எஸ். ஞானமுரளி, கே. ஞானராஜா, கே. ஜதீசன், திருமதி. ஜி. ஜெயபாரதி, செல்வி. ரி. ஜெயபாரதி, எஸ். ஜெயச்சந்திரன், திருமதி. பி. கஜலக்ஷ்மி, திருமதி. எம். கஜேந்தினி.

திருமதி. என். கமலினி, செல்வி. சி. கவிதா, திருமதி. பி. கவிதா, எஸ். கேசவன், செல்வி. எஸ். கிருஷ்ணவதனி, கே. கிருபாகரன், என். கிருஷ்ணகுமார், ரி. கிருஷ்ணதாஸ், திருமதி. ஜெ. மலர்விழி, செல்வி. எஸ். மஞ்சுளா,செல்வி.எஸ்.மீனா,ரி.மோகன், எஸ். முகுந்தன், ரி. முரளிதரன், திருமதி. கே. நளிந்தினி, எஸ். நந்தகுமார்.

திருமதி. பி. நருமதா, எம். பரமேஸ்வரன், பி. பரணிதரன், செல்வி. எஸ். பரிமளா, திருமதி. கே. பத்மறாணி, செல்வி பி. பிருந்தா, திருமதி. எஸ். பூரணி, செல்வி. எஸ். பிறேமளா, திருமதி. என். ராஜலெட்சுமி.

பி. ராஜேஸ்வரன், ஆர். ராஜ்கரன், திருமதி. எஸ்.ராஜினி, என். ரமணன், என். ராமதாஸ், திருமதி. பி.ரேணுகா, திருமதி. பி. உருத்திராதேவி, செல்வி. எஸ். சகுந்தலா, திருமதி. பி. சகிலா, செல்வி. கே. சஞ்ஜீவனி, செல்வி. எஸ். சரவாஜினி, செல்வி. ஏ. சர்வாஜினி, செல்வி. எஸ். சசிகலா, என். செல்வேந்திரா, கே. சேதுலிங்கம்.

ஆர். சாந்தகுமார், செல்வி. பி. சாந்தநாயகி, செல்வி. பி. சர்மிளா, திருமதி. வி. சித்திரகலா, திருமதி. ரி. சிவாஜினி, செல்வி. எஸ். சிவகாந்தி, ரி. சிவகுமார், எம். சிவலிங்கம், வி. சிவானந்தநாதன், எஸ். சிவராஜன் எஸ். சிவரஞ்சினி, திருமதி. ம. சிவசாந்தினி, ரி. ஸ்ரீகரன், எஸ். ஸ்ரீதரன், ஏ. சுபாகரன்.

செல்வி. பி. சுபந்தினி, திருமதி. எஸ். சுகந்தினி, திருமதி. பி. சுகந்தினி, செல்வி. கே. சுலோஜினி, திருமதி. ஆர். சுனித்தா, திருமதி. எஸ். சுதாஜினி, ஆர். சுதர்சன், திருமதி. பி. சுதர்சினி, ரி. தனேஸ்வரன், கே. தர்மஜீலன், செல்வி. எஸ். தர்சினி, பி. தயாளன், செல்வி. வி. தயாளினி. செல்வி. எஸ். திகழ்ஜோதி, திருமதி. ஏ. தினேஷா, திருமதி. கே. திரிவேணி திரிலோசினி, ஆர். துஷியந்தன், கே. துஷியந்தன், செல்வி. எஸ். உருத் திரபிரியா, கே. வசந்தமாறன், திருமதி. எஸ். வாசுகி, செல்வி. கே. வாசுகி, ஏ. வத்சலன், திருமதி. பி. விஜிதா, ஆர். வின்சன்ற்.

**முழுநேரம் 2007/2008**

பி. தயாபரன், திருமதி. கே. மார்லின் சுஜீவா, திருமதி. ரி. தாக்ஷாயினி, எஸ். பொன் திவாகரன், ஜெ. ரஞ்சித்காந், திருமதி. ஆர். வாசுகி.




சாவகச்சேரி நகர்மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் சங்க அங்கத்தவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு மகளிர் விவகார குழுவின் உபதலைவி திருமதி. வி. விவேகானந்தன் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் சங்கத்தின் உபதலைவி, செயலாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்' :- சாவகச்சேரி நிருபர்)

# இராசி பலன்

26.05.2009

(வைகாசி 12, செவ்வாய்க்கிழமை

துதியை பிற்பகல் 2.17 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 4.41 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை


சுபநேரம் 10.22-11.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, தனவிரயம், பிரயாண நன்மை. |
| இடபம் | உஷ்ண வியாதி, போசன சுகக் குறைவு, காரிய தாமதம், தன விரயம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, வெகுமானம், போசன சுகம். |
| கடகம் | உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம், சுபசெலவு, பயணம். |
| சிங்கம் | குடும்ப மகிழ்ச்சி, தொழில் வருவாய், காரிய அனுகூலம், சயனசுகம். |
| கன்னி | ஆரோக்கியம், பிரபுத்தன்மை, காரிய சித்தி, தொழில் விருத்தி. |
| துலாம் | உத்தியோக பங்கம், குடும்பக் கவலை, பிரயாணம், வீண்பயம். |
| விருச்சிகம் | வாகனபயம், எதிரிகளால் தொல்லை, காரிய தடங்கல், போசன சுகம். |
| தனுசு | மனோ தைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| மகரம் | முயற்சி கைகூடும், பகைவர் நேசம், தொழில் விருத்தி, தன விரயம். |
| கும்பம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு. |
| மீனம் | உறவினர் சந்திப்பு, ரோக பயம், தனவிரயம், வாகனசுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 |
| தக்காளி | 400 | 400 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 20 | 40 | 20-50 |
| புடோல் | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 |
| பாகற்காய் | 120 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 110 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25-35 |


யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெற்ற "முன்பள்ளி ஆசிரியர் ஆய்வரங்கும், 'அகவிழி'விசேட முன்பள்ளி சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வின் போது யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து "புக்லாப்" நிறுவன முகாமையாளர் ரவியிடம் நூலை வழங்குவதை முதலாவது படத்திலும், ஆங்கில வள இறுவட்டு வெளியிடுவதை இரண்டாவது படத்திலும், 'அகவிழி' சிறப்பிதழை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா வெளியிட முதற் பிரதியை வர்த்தகப் பிரமுகர் இ.ச.பேரம்பலம் பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை துணைவி தெவிண்டைப் பிராய் முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூன் 5 ஆம் திகதி இரதோற்சவமும் 6 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 8 ஆம் திகதி சங்காபிஷேகமும் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது.(ஓ-27)

✠✠✠

வேலணை மேற்கு மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூன் 6 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம், 7 ஆம்திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## சங்காபிஷேகம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மகா சங்காபிஷேகம் நாளை மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஓ-27)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி-இராஜ வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சக்திவேல் முருகன் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் 11ஆம் நாள் பிற்பகல் 1.30 மணிக்கு திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் தொடர்ந்து சுவாமி வீதி உலாவும் இடம் பெறவுள்ளது. (ஓ)

## இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களான நா. சுவாமிநாதன் த.காளிதாசன் ஆகியோர் இணைந்து உருவாக்கிய தரம் 5 மாணவர்களுக்கான கணித பாட பிரசினங்கள் தீர்த்தல் தொடர்பான இறுவட்டு வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நீர்வேலி அணியப் பாடசாலைகளின் அனுசரணையுடன் கீர்த்திகன் மென்பொருள் நிறுவனத்தினரால் வெளியிடப்படும் இவ் இறுவட்டு வெளியீட்டு விழாவும் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் சி.சித்திரவடிவேல், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

# நெக்டெப் திட்டத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணத்தில் கரையோர சமுதாய அபிவிருத்தி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்காக வருகை தந்த திட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.குரூஸ், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடைந்த உட்கட்டுமானப் பணிகளை கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைத்துள்ளார்.

இதன்போது அல்வாய் வடமத்தியில் அமைக்கப்பட்டுள்ள பலநோக்கு மண்டபம் வியாபாரிமூலையில் அமைக்கப்பட்டுள்ள உற்பத்தி நிலையம், அல்வாய் மேற்கு அல்வாய் வடமேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பலநோக்கு மண்டபம் போன்றன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் உணவு உற்பத்தி செய்தல், பதனிடல், பொதியிடல் ஆகியவற்றை மேற்கொள்ளவும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் வாழ்வாதார முன்னேற்றம் போன்ற பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இவ் கட்டடங்கள் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட திட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

# நாடகப் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நெறியின் இவ்வாண்டுக்கான (16 ஆவது) புதிய பிரிவு எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளதால், இப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகமும் அரங்கியலும் தொடர்பான அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கியதாக அமையும் இப் பயிற்சி நெறிக்கு நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புவர்களும், க.பொ.த.சாதாரண தரத்திற்கு மேல் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று யூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பாக இணைப்பாளர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். 16 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள எவரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கடந்த 15 பிரிவுகளிலும் ஏராளமான மாணவர்கள் இப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக செ.சண்முகலிங்கம், செயலாளராக சோ.நரேந்திரன், பொருளாளராக கி.சற்குணநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-36)

## பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றிருக்கும் மாணவர்கள் இவ்வனுமதி சம்பந்தமாகத் தமக்கு ஏதாவது பிரச்சினை இருப்பின் அல்லது அனுமதி பெற்றும் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடரமுடியாத மாணவர்கள் இருப்பின் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சார்பில் மானிய ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஈடுபட்டுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவருடன் தொடர்பு கொள்ள விரும்பும் மாணவர்கள் 222 2720 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கவிதை, கட்டுரை, சிறுகதை,குறும்படம் ஆகிய போட்டிகள் பிரதேச ரீதியில் திறந்த போட்டியாக நடத்தப்படவுள்ளது.

இதன்பிரகாரம் தென்மராட்சிப் பிரதேச எழுத்தாளர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் இருந்து நடப்பு வருடத்துக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

"தேசிய மரபுரிமை சிறுவர்களுக்கானது" என்ற கருவை மையமாகக் கொண்டு ஆக்கங்கள் இருக்க வேண்டும்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## சமய அறிவுப் பரீட்சை பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியருக்கிடையே கடந்த ஆண்டு நடத்தப்பட்ட 10 தரங்களுக்குமான சமய அறிவுப் பரீட்சையில் பங்குபற்றி ஒவ்வொரு தரத்திலும் முதல் மூன்று இடங்களையும், அதிவிசேட சித்திகளையும் பெற்றுக்கொண்டவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுவின் தலைவரும், மாநகரசபை ஆணையாளருமாகிய மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு தரத்திலும் 3 இடங்களையும் அதிவிசேட சித்திகளையும் பெற்றுக்கொண்டவர்கள் அனைவரும் தவறாது பங்கேற்று தமக்குரிய பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு செயலாளர்கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் விசேட சித்திகளைப் பெற்றுள்ளவர்களது சான்றிதழ்கள் யாவும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

**யாழ்.செய்திகள்**

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்க மின்தறி ஆலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (எண்பார்வை) சி. கனகசபாபதி, , ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பொறுப்பாளர் வே.மகேந்திரம், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் ந.துரைராசா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.ஜெயந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (ஓ-27)

## மினிகோப்சிற்றி திறப்பு விழா

(வட்டுக்கோட்டை)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க (கிளை 5) பண்ணாகத்தில் அமைக்கப்பட்ட மினி கோப் சிற்றியை எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் திறந்து வைக்கவுள்ளார். (ஓ-27)

# மொழி-இலக்கியம்-பண்பாடு 06

தொல்காப்பியர் தன்னுடைய இலக்கணத்தை, தான் வாழ்ந்த காலத்து வழக்கினையும் செய்யுளையும் நாடி அமைத்துள்ளார் என்று பனம்பாரனார் கூறுகின்றார். 'செய்யுள்' என்பது என்னவென்று உரையாசிரியர்கள் தெளிவான விளக்கமெதனையும் அளித்தாரில்லை. வழக்கு என்பது அக்காலச் சாதாரண மக்களிடையே வழங்கிய பேச்சாக இருக்கலாம்.

ஆனால், அதற்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால், 'எழுத்து' என்பதற்குப் பதிலாக 'ஒலி' என்ற சொல்லினையே தொல்காப்பியர் பயன்படுத்தியிருப்பார். வழக்குக்குச் சிலஇடங்களிலே தொல்காப்பியர் சூத்திரம் வகுத்திருப்பது உண்மையே.

உதாரணமாக, வல்லெழுத்தை முதனிலையாகக் கொண்ட பெயர்கள் வருமொழியாக வருமிடத்து புளி என்னுஞ் சொல் புனருமிடத்து மேல்லெழுத்து மிகும் எனக் கூறிவிட்டு அடுத்து சூத்திரத்தில்,

*வல்லெழுத்து மிகுனு மான மில்லை*
*யொல்வழி யறிதல் வழக்கத்தான*

என்றுகூறியுள்ளார். இவ்விரு சூத்திரங்களின்படி புளிங்கறி என்பது புளிங்கறி என்று வழக்கிலே இடம்பெறும் என அறியக் கூடியதாயுள்ளது. இவ்வாறு சிற்சில இடங்களிலே 'வழக்கு' பற்றித் தொல்காப்பியர் கூறியிருப்பினும் அவருடைய இலக்கணம் இலக்கிய மொழிக்கே இலக்கணம் வகுக்கின்றது என்பது வெளிப்படை.

இவ்வாறு எழுத்தால் ஆகிய இலக்கியங்களுக்கு இலக்கணம் எழுதப்பட்டதாலே, மொழியாய்வு என்பது இலக்கிய மொழி ஆராய்ச்சியாகவே அமைந்தது. இதனால், தமிழில் இலக்கிய மொழி -பேச்சு மொழி என்னும் வேறுபாடு கூர்மைபெறத் தொடங்கியது. ஆனால், தற்கால மொழியியலாளர் மொழியென்றால் முதன்மைக்கண் பேச்சு மொழியையே கருதுகின்றனர். எழுத்து மொழி அல்லது இலக்கியமொழி இரண்டாம் தரத்தது என்றே அவர் கொள்வர்.

### பண்பாடு என்றால் என்ன?

பண்பாடு என்னும் சொல் Culture என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். பண்பாடு என்னும் இப்புதிய கலைச் சொல்லினைத் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்தியவர். டி.கே.சிதம்பரநாத முதலியாரென அறிகின்றோம். பண்படு என்னும் வினையடியின் இறுதிக்கு முதலிலுள்ள உயிர் ஒலியின் நீட்டத்தால் பிறந்த பெயர்ச்சொல்லே பண்பாடு என்னுஞ் சொல்லாகும்.

இம்முறையில் பல வினையடிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் தமிழிலே ஆக்கம் பெற்றுள்ளன. உதாரணம்: மின்-மீன், தொழிற்படு-தொழிற்பாடு, செயற்படு -செயற்பாடு முதலியன Culture என்னும் ஆங்கிலச் சொல் Kult (குல்ற்) என்னும் ஜேர்மன் மொழி வினையடியிலிருந்து பிறந்ததாகும். இவ் வினையடி முதலில் "நிலத்தைப் பதனிடுதல்" என்னும் பொருளில் அமைந்தது. தமிழ்ச் சொல்லாகிய பண்பாடு "திருத்துதல்", "செப்பனிடுதல்", "பதனிடல்", "நலனாதல்", "தகுதியாதல்" போன்ற பொருள்களைத் தருகின்றது.

நிலத்தைப் பண் படுத்துவதற்கு காட்சி முறையாகப் பயன்பட்ட பண்பாடு என்னும் சொல், நாளடைவில் மனதைப் பண்படுத்துதல், சமூகத்தைப் பண்படுத்துதல், நாட்டைப் பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள் விரிவு கொள்ளத் தொடங்கியது. இத்தகைய பொருள் விரிவு பெற்ற நிலையிலேயே 1937 இல் டி.கே.சிதம்பரநாத முதலியார் இச் சொல்லைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்தார்.


பெரும்பாலானவர்கள் பண்பாடு என்ற சொற் கேட்ட மாத்திரத்தில் அது நலனைக் குறிப்பதாகவே கொள்ளுவர். ''அவர் ஒரு பண்பாடுள்ள மனிதன்", "அது பண்பாடுள்ள ஓர் இனம்'' என்றெல்லாம் கூறும் பொழுது, அப்பொருளை மனங்கொண்டே கூறப்படுகின்றன.

''மக்களது அறிவு நலம், கருத்து நலம், குணநலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மென்மேலும் திருந்தி வரும் திருத்த நிலையே இங்கு குறிப்பிட்ட பொருள். இது விஞ்ஞானத்தில் வழங்கும் பொருளன்று. அனால் மாத்யூ ஆர்னல்டு முதலிய இலக்கியப் பேராசிரியர்கள் சிலர் இப் பொருளை உற்பத்தி செய்துவிட்டனர்.

இப்பொருளிலேயே தமிழ் அறிஞர்கள் இச் சொல்லையும் Culture இதன் மொழி பெயர்ப்பாகிய பண்பாடு என்ற சொல்லையும் வழங்கி வருகிறார்கள்''என்னும் வையாபுரிப் பிள்ளையின் கூற்று இதனை வலியுத்துகின்றது. இந்நோக்கு பண்பாடு பற்றிக்கூறும் ஒரு வரைவிலக்கணமெனக் கொள்வதாயமைகின்றது. இதன்படி, குறிப்பிட்ட மதிப்பீடுகளின்படி, மனிதாயம் அடையும் பூரணத்துவ நிலையே பண்பாட்டின் இலட்சியமாகக் கொள்ளப்படும்.

இத்தகைய பண்பாட்டாய்வானது, மனித இனத்துடன் தொடர்புற்றதாகவும், எக்காலத்துக்கும் ஏற்றதாகவுமுள்ள மதிப்பீடுகளை இனங்கண்டு, விளக்க முற்படுகின்றது. உதாரணமாக, வள்ளுவனுடைய திருக்குறளை உரைகல்லாகக் கொண்டு தமிழர் பண்பாட்டை விளக்குதலை எடுத்துக்காட்டலாம்.

''பண்பாடு என்பதற்கு மிகச் சுருங்கிய பொருள் கொண்டால் அதன் தன்மை உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித் தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் அறியப்படும் என்று ஆசிரியர் மாத்யூ ஆர்னல்டு (Mathew Arnold) கூறியதை ஒப்புக்கொள்ளுவதாயிருந்தால், வள்ளுவரது திருக்குறள் தமிழ் மக்களது பண்பாட்டின் நேர்மையை மிக நன்றாக எடுத்துக்காட்டுகிறது எனலாம்.



என்ற கூற்றினைஒப்பிட்டு நோக்குக.

பண்பாடு பற்றி ஆராயும் துறைகளுள் அதி முக்கியத்துவம் வாய்ந்தது மானிடவியல் துறையேயாகும். மானிடவியல் என்னும் விஞ்ஞானத்துறையின் ஆய்வுக்கு இனம், பண்பாடு ஆகிய இரு விடயங்களும் உள்ளாகின்றன. இனம் பற்றி ஆய்வதை பௌதீக மானிடவியல் என்பர். குறிப்பிட்ட சில பௌதீகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உலக மக்களை இனப்படுத்தும் முயற்சி இவ்வாய்விலே மேற்கொள்ளப்படு கின்றது. பண்பாடு பற்றி ஆய்வதை பண்பாட்டு மானிடவியல் என்பர். மனித சமூகங்களை மக்கள் வாழ்க்கை நிலைகளுடன் தொடர்புறுத்தி ஆராய்கின்றது. பண்பாட்டு மானிடவியல் அவ்வாறு ஆராயும் போது ஒவ்வொரு சமூகத்தின் குறிப்பிட்ட வாழ்க்கைக் கோலம் களமாக அமைந்து


**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

விடுகின்றது. மானிடவியல் துறையைச் சார்ந்த கலையைச் சொல்லாக பண்பாடு கருதப்படும் பொழுது, அச் சொல் மனித வாழ்வின் சகல அம்சங்க ளையும் பொருந்திய முழு வரலாற்றையுமே சுருக்கிக் கூறிவிடுகின்றது. அவ் வரலாற்றிலே குடும்பம் ஒரு சமூகத்தின் பகுதியாக அமையும் பொழுது அக்குடும்பத்தின் அங்கத்துவனாகிய மனிதனின் வாழ்வு, செயற்பாடுகள் ஆகி யன பற்றிய கதையே கூறப்படுகின்றது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

68



ஏஞ்சலா தன்னையே மறந்த நிலையில் நின்றிருந்தாள். ஒபாமா அவளைநோக்கி நடக்கும்போது அவள் சேர்ளி, மோனாவுடன் பேசிக்கொண்டிருந்தாள். 'மிஸ் ரைடர்' என்று அவர் என்னைஅழைத்ததும் நான் அப்படியே என்னை மறந்து விட்டேன் என்றாள்.

அந்த நேரம் ஒபாமா இடையில் புகுந்து " முதல்வரிடம் பேசி பேரணிக்கான திகதியை பெற்றீர்களா?" என்று கேட்டார்.

''அவர் என்னைப் பார்த்து நானே இவ்வளவு இளமையோடு இருக்கும் போது (14) பதினான்கு வயதுப் பெண் குழந்தைக்குத் தாயாக இருப்பதை நம்ப முடியாமலுள்ளது என்றாரே பார்"

ஏஞ்சலா ஒபாமாவை கண்டுகொள்ளாமலே தன் குதூகல உணர்வில் தன்னைப் பறிகொடுத்து மோனாவுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

மீண்டும் ஒபாமா குறுக்கிட்டார். அவர் பேரணிக்கு வரச் சம்மதித்தாரா என்று வினவினார். ஏஞ்சலா, மோனா, சேர்ளி ஆகிய மூவரும் பொறுமையிழந்தவர்களாக ஒபாமாவைப் பார்த்து ''என்ன பேரணி? '' என்று விளித்தனர்.

ஒபாமா கையை விரித்தவராய் விரைந்து வீதிக்கு வந்து தன்காரை நோக்கி நடந்தார். அப்போது தான் உவில் அவரைக் கண்டு அவர் ஏன் அவசரமாக வெளிக்கிளம்புகிறார் என்று விசாரித்தார்.

ஒபாமா தன் கோபத்தையும் நடந்த சம்பவத்தையும் கூறி யாரும் எதிலும் ஈடுபாடில்லாமல் பேருக்கும் புகழுக்குமாகத் தான் பணிபுரிகிறார்கள் என்று எரிந்து விழுந்தார்.

தனது ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தினார். "நீங்கள் நல்ல வேலையை செய்ய வேண்டும். அதுவும் உடனே செய்யவேண்டும். விரைந்து முடிக்க வேண்டும். அப்படிச்செய்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும் என்று துடிக்கிறீர்கள்.

கடவுளுக்கு எல்லாம் தெரியும் அவர் உங்களை நேசிக்கிறார். நாங்கள் உங்களை நேசிக்கிறோம். மாநகர சபைத் தலைவரை நாங்கள் நேரில் அழைப்போம். ஆகையால் சாந்தப்படுங்கள். பணியில் வீறுநடை போடுங்கள்" என்று உவில் அறிவுரை வழங்கினார்.

ஒபாமாவுக்கு 26 வயதாகிறது .1987 இல் சிக்காகோவுக்கு வந்துசேர்ந்தார். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் கடுமையாக உழைத்தனர். நல்ல அறுவடை கிடைக்க ஆரம்பித்தது. வீதி மூலையில் கூடும் கூட்டம் ஐம்பது பேரை அங்கத்தவர்களாக கொண்டு பல பணிகளில் இறங்கியது.

அயற் புறங்களைச் சுத்தம் செய்தல், இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு, சுகாதார சேவைகளை சீரமைத்தல், மாநகரசபையோடு உடன்படிக்கை என்று பல பணிகள் செய்யப்பட்டன. வடக்கே திருமதி கிறன்சோ, திருமதி ஸ்ரீவன்ஸ் ஆகியோரின் தலைமையில், பூங்கா திருத்தியமைக்கப்பட்டது. வீதிகள் திருத்தப்பட்டன. வடிகால்களில் வளர்ந்திருந்த செடிகள், மரங்கள் நீக்கப்பட்டன. குற்றங்களைக் களை யும் முயற்சியாக எங்கும் விழிப்புக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இப்போது எல்லாவற்றிற்கும் சிகரமாக, வேலை பெற்றுக்கொடுக்கும் மையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைப்பின் வளர்ச்சியின் ஒரு அங்கமாக ஒபாமாவின் செல்வாக்கு வளர்ந்தது. பல நிறுவனங்கள் அவரை தங்கள் ஆலோசனைச் சபைகளில் அங்கத்தவராக ஆக்கிக் கௌரவித்தன.

தொழிற் பாசறைகள் நடாத்தும்படியும் வேண்டப்பட்டார். உள்ளூர் அரசியல்வாதிகளின் உதட்டில் அவரின் பெயர் வராவிட்டாலும் அவரை எல்லோருக்கும் தெரியும்.

### ஜம்பொன்

அவரின் தலைமைத்துவம் பற்றியாரும் குறைகூறாதபடி மாசற்ற மாண்பாளனாகக் கணிக்கப்பட்டார். வயதில் குறைந்தவராகையால் வயதில் மூத்த ஆண்களும் பெண்களும் அவரைத் தாங்கள் பெறாத மகனாக தன் வயதுக்கும் மீறிய அறிவும்ஆற்றலும் உள்ள அருமைத் தனயனாகவே கருதினர்.

இத்தனைக்கும் அவரின் நல்ல சாதனைகளே காரணமாயின. ஆயினும் அவர் அத்தோடு திருப்தியடையவில்லை. (தொடரும்)

# தரம் -5 புலமை பரிசில் பரீட்சை- 2009

## மாதிரி வினாத்தாள் -2

க.கைலைநாதன்
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி

வினாத்தாள் 1
நேரம் :-45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளில் விடையளிக்க.

☼ கீழே உள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு உருக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தரப்பட்ட கருத்துக்களிற்கு மிகத் தொடர்புள்ள உருவின் கீழ் கோடிடுக.

1. அதிகமாக முட்டையிடுவது.




(1) (2) (3) (4)

2)எமது நாட்டின் தேசியக்கொடியில் இருப்பது.



(1) (2) (3) (4)

☼ கீழேயுள்ள கூண்டினுள் காணப்படும் பொருட்களை மூன்று வகை களாகவேறுபடுத்தி அவற்றுக்குரிய இலக்கங்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



[illegible] தொகுதி ..........
[illegible] தொகுதி ..........
[illegible] தொகுதி ..........

6) எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
1.உடலில் இறகு இருத்தல் 2.பறப்பதற்கு இயலுமாக இருத்தல்
3.பழங்களை மட்டும் உணவாகக் கொள்ளல்

7) பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப் பழகுதல் வேண்டும் இதற்குரிய காரணம்.
1.மூத்தோர் பிள்ளைளைவிட அனுபவும் நிறைந்தவராகையால்
2.மூத்தோரினால் பிள்ளைகளுக்கு தண்டனை வழங்க முடியும் மாகையால்
3.மூத்தோர் நோயினால் வருந்துவத்னால்

☼ 8,9ஆம் வினாக்களுக்கான வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத்தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

8) உடை- துணி எனின் சப்பாத்து-
1.நூல் 2. தோல் 3.காலுறை

9) இன்று -நாளை எனின் திங்கள்-
1.செவ்வாய்க்கிழமை 2.புதன்கிழமை 3.வெள்ளிக்கிழமை

☼ பின்வரும் தகவல்களைக் கொண்டு 34,35ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| அப்பிள் -1 | அப்பிள் - 4 |
| அன்னாசி -1 | அன்னாசி -2 |
| விலை ரூபா 16.00 | விலை ரூபா 51.00 |

10)அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது ?
1.ரூபா 8.00 2.ரூபா.9.50 3.ரூபா 7.00

11) அப்பிள் ஒன்றினதும் அன்னாசி இரண்டினதும் மொத்த விலை
1.ரூபா 18.50 2.ரூபா.20.50 3.ரூபா22.50


12) கீழே காணப்படும் அட்டவணை ஒரு தொழிற்சாலையில் 6 வருடங்கள் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.

| வருடம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் | 16 | 25 | 36 | 49 | 64 |

அதன்படி எத்தனையாம் ஆண்டில் 121 தொழிலாளர்கள் இருந்திருப்பார்கள்?
..............................
1. 2010 2. 2011 3. 2012

13) 2009 ஆம் வருடத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் எந்த வருடத்தில் பிறந்திருப்பார்
1.1998,1999 2. 1996,1995 3. 2001,2002

☼ சதுர பகுதி ஒன்றில் ஆறு பக்கங்களிலும் நிறந்தீட்டப்பட்டுள்ள மூன்று உருக்கள் காட்டப்பட்டுள்ளன. இத்தகவலைப் பயன்படுத்தி விடை தருக.




14.இச் சதுர முகியில் பச்சை நிறத்தில் எதிரேயுள்ள பக்கத்தின் நிறம் யாது?
1.ஊதா 2.சிவப்பு 3.கறுப்பு

15.இச் சதுரமுகியில் நீல நிறத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தின் நிறம் யாது?
1.ஊதா 2.பச்சை 3.மஞ்சள்

16.பாதை ஒன்றை அமைப்பதற்கு 3 மனிதர்களுக்கு 8 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 6 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பார்
1. 4 நாட்கள் 2. 24 நாட்கள் 3. 28 நாட்கள்

17.


| | | |
|---|---|---|
| க | ம | சி |
| ய | ண | வ |
| கு | ப | டு |

இவ்வுருவின்படி எழுத்து "வ" இதற்காக பயன் படுத்தப்பட்டுள்ள உரு எது?



1. 2. 3.


18. இரண்டு சதுரங்களையும் நான்கு செவ்வகங்களையும் கொண்டு உருவாக்கக் கூடிய திண்ம தளவடிவம் எது.




(1) (2) (3)

19. ஒரு புகையிரதம் 45ஆவது KM கல்லலீருந்து 50ஆவது KM கல் லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதி யில் சென்றால் 80ஆவது KM கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் எடுக்கும்?
1. 30 2. 80 3. 50


20. குமார் சிவாவின் தந்தையாவர் செந்தில் குமாரின் தம்பி ஆவார். பவியா சிவாவின் ஒரே தங்கை ஆவார். பவியாவும் செந்திலும் சந்திக்கும் போது பவியா என்ன உறவு முறையைக் கூறிக் கொண்டு செந்திலுடன் பேசுவார்.
1.பெரியப்பா 2. சித்தப்பா 3. அண்ணா

21.  ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும் போது கிடைக்கும் உரு யாது?




(1) (2) (3)

22. கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் உருக்கள் 1,2,3 என்பவற்றில் எண்கள் ஒரு கோலத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கோல அமைப்பை அறிந்து மூன்றாவது உருவின் வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்களை எழுதுக.




1. 72 2.58 3.67

23.




.........


☼ 2009ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதற்கேற்ப 24,25 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

24. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உள்ள செவ்வாய்க்கிழமை களினதும் புதன்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே
1. 5,4 2. 4,5 3. 6,5

25.2009 இல் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை திங்கட் கிழமை உள்ளது.


1.53 2. 52 3. 50

26.இவ் உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1. 26 2.25 3.23

**☼பின்வரும் உரு காட்டுவது சிறிய சதுரமுகிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிச் செய்த பெரிய "சதுரமுகி" ஒன்றாகும். அதற்கமைய 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




27. இப் பெரிய சதுரமுகியில் உள்ள சிறிய சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ................................

28.இப் பெரிய சதுர முகியின் ஒரு முகத்திற்கு 850 ml நிறப் பூச்சி தேவை எனின எல்லா முகத்திற்கும் நிறப் பூச்சு பூச எத்தனை லீற்றர், மில்லிலீற்றர் நிறப்பூச்சு தேவை.

..................................l ....................................ml.

29.



கடதாசித்தாள் ஒன்றில் நிற நூல்களை ஒட்டி உருவில் காட்டப்பட்டுள்ள வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதில △பகுதியை ஆக்க 9cm நூல் தேவைப்பட்டது எனில் இந்த உருவை உருவாக்கத் தேவையான நூல் எவ்வளவு?

1. 54 cm 2. 68cm 3. 72cm

**☼இலக்கம் 30 முதல் 31 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விபரங் களையும் உருவங்களையும் கவனத்திற்கொண்டு மிகச் சரியான உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

30. ✠ கரன் தொப்பி ஒன்றை அணிந்துள்ளார்
✠ கரனின் கையில் ஒரு பை உண்டு
✠ கரன் நீளக் காற்சட்டை அணிந்துள்ளார்
✠ கரன் நீளக்கைச் சேட் அணிந்துள்ளார்



(1) (2) (3) (4)

31. ✠ சாம்பவியின் முடி நீளமாக உள்ளது.
✠ சாம்பாவியின் முடியில் ஒரு பூ வைக்கப்பட்டுள்ளது.
✠ சாம்பவி மூக்குக் கண்ணாடி அணிந்துள்ளார்
✠ சாம்பவி சிரித்துக்கொண்டு இருக்கிறாள்



(1) (2) (3) (4)

**☼சலிம் இந்திரன், காதர்,விமலன் ஆகிய நால்வரும் கடந்த வருடம் நடை பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சலீம் 182 புள்ளிகளையும் இந்திரன் சலீமை விட 8 புள்ளிகள் குறைவாகவும் காதர் விமலனை விட 16 புள்ளிகள் கூடுதலாகவும் விமலன் இந்திரனை விட 7 புள்ளிகள் அதிக மாகவும் பெற்றான் எனில்.**


32.மிகக் கூடிய புள்ளியை பெற்ற மாணவர் யார்

1.காதர் 2.இந்திரன் 3.விமலன்


33.விமலன் பெற்ற புள்ளிகள் எத்தனை?

1.197 2. 181 3.174

34.



இந்த வட்டமான காட்போட் துண்டை எட்டுச் சமமான பகுதிகளாக வெட்டினால் அந்த ஒரு துண்டின் வடிவாக அமைய வேண்டியது.





**☼35,36 ஆகிய வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் 5 சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்கு வரிசை மாற்றப்பட்டுA,B,C,D,E எனத் தரப்பட்டுள்ளன. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்கு வரிசை இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.**

35.ஒரு பிள்ளை நித்திரை விட்டெழுந்து, ஆயத்தமாகி, பாடசாலைக்குப் புறப்படுதல்





1. CBDEA 2.ADCBE 3.BCADE 4.BCEDA

36.ஒரு பிள்ளை பாடசாலைக்குச் சென்று வகுப்பறையில் பாடத்தில் பங்குபற்றல்




1. CEDAB 2.ECDBA 3.ACEDB 4.CDEAB

37.யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் தரம் 5இல் கல்வி கற்கும் சோபி என்னும் மாணவியைக் காட்டுவதற்குப் பின்வரும் உருவரையப்பட்டுள்ளது. இதில் R இனால் காட்டப்படுவது யாது?




1. பாடசாலை 2. தரம் 5 3. சோபி

38. பாலன் காலை கடற்கரை வழியே சென்று கொண்டிருந்தான் அவனது இடது கைப்பக்கத்தில் சூரியன் உதித்தது. பாலன் எத்திசை நோக்கிச் செல்கிறான்?

1.வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு

**☼பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.**

**கோண கோண மலையேறி**
**கோப்பிப் பழம் பறிக்கையிலே**
**ஒரு பழம் தப்பிச்சுண்ணு**
**உதைச் சானய்யா சின்னத்துரை**

39.மேலே குறிப்பிட்ட பாடல் ஒரு.

1.கும்மிப்பாடல் 2.தொழிற்பாடல் 3.விளையாட்டுப்பாடல்

40. சின்னத் துரையின் தொழில் யாது?

1.எஜமான் 2.கோப்பிபறித்தல் 3.கணக்குப்பிள்ளை

# மாதிரி வினாத்தாள் - I பகுதி II விடைகள்

(01)1.அழகு 2.பார்த்து மகிழ்வோம் 3.புத்தம்புது
4.அமைப்போம்/பறிப்போம்/ இறைப்போம்/ வளர்ப்போம்/களிப்போம்
5 களைகள் 6. மலர்ச்சோலை/பூஞ்சோலை மலர்வனம்
7.உரம் போடுதல் 8.பூங்கா அமைப்பேன் 9.ஆண்-காளை/எருது பெண்-நாகு/பசு
10.வீட்டில்+ஒரு 11.அவலட்சணம்/அலங்கோலம்
(02) உதவி செய்தல் 03) 1.பாகற்காய் 2.வெங்காயம்
(04) பலூனின் வெளிப்புறம் வாய்ப்பகுதி இருத்தல் வேண்டும்.வாய்ப்பகுதி பலூனின் வெளிப்புறம் இருத்தல் வேண்டும்.
(05) குஞ்சு (06) 1.Black board 2.Principal 3.Head 4. Market
(07) 1.பூக்கள் 2.நீலம் 3.பறவை 4.கண்கள்
(08)1.மல் 2.அலியா 3.ஒபகே வயச கீயத? 4.பா(ட்)ட

09)1.பென்குயின் 2.தீக்கோழி 3.மரங்கொத்தி 4.மீன்கொத்தி
10)1. மிளகு 2.அறுகு 3.ஆடாதோடை 4.ஆமணக்கு
(11)1. 7 2. 4 3. 6 4. 3 5. 2
(12)1-3. 2-2 3-4 4-3. 5-1 6-4 7-1 8-4 9-3 10-3 11-3
12- 2 13-2 14-2 15-1
(13)1. 6543 2. 1.135 3. ரூ.36.00 4. 20 5 1l. 100Ml.
6. 410, 210, 254 7. 500 8. 565cm
9.1l. 750ml. 10. 4321. 11.62.ரூபா 12. 105 13.135 ரூபா 14.30
(14) 1.தரம் 1, தரம் 5 2. 25 3. 400 ரூபா 4. 540 5.340 6.21
7.தரம் 2,தரம் 3

# போர்க் குற்றசாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசு விசாரணை மேற்கொள்ளும்

## இலங்கை ஐ.நா.கூட்டறிக்கை

இலங்கையில் இராணுவப் படையின ருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல்களின்போது நடந்ததாகக் குற்றம்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அதிகாரிகள் விசார ணைகளை மேற்கொள்வார்கள் என ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் கூட்டாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தலைச்மைச் செயலர் இலங்கைக் கான தனது விஜயத்தை நிறைவுசெய்த வேளை இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டங் களில் இருதரப்பினரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்று கருத இடமிருப் பதாக சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் கூறுகின்றன.

அரசாங்கம் இதனை மறுக்கிறது என் றாலும், கூட்டறிக்கையில் இவ் விவகாரம் தொடர்பாக அது பதில்தந்துள்ளது. (ஓ-5)

# வன்னியில் தொடரும் சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக மீட்கப்பட்ட பிரதேசங்களில் படையினரால் கடும் சோத னை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் புலி உறுப்பினர்களால் அப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிவெடிகளில் சிக்குண்டதில் படைத் தரப்பினருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதேவேளை அப் பகுதிகளில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான ஆயுத உபகரணங்கள் மற் றும் வெடி பொருட்கள் பலவும் படைத் தரப் பினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இறுதியாக மீட்கப்பட்ட வெள்ள முள்ளிவாய்க் கால் பிரதேசம் உட்பட முல்லைத்தீவு மாவட் டத்தின் பல பகுதிகளிலும் படையினரால் சோத னை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது விடுதலைப்புலிகளால் அப் பகுதிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த பெருமளவான ஆயுதப் பொருட்கள் கைப்பற் றப்பட்டன.

இராணுவத்தின் 53, 57,58,59 ஆகிய படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனை நடவடிக்கைகளின்போதே இந்த ஆயுத உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள் ளன.

இந்நிலையில் அப்பகுதிகளில் புதைக் கப்பட்டுள் கண்ணிவெடிகளில் சிக்குண்ட படையினருக்கு சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. (ஓ-6)


## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



12.04.2009
அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பச்
செல்வம்

அமரர்
### சண்முகம் கங்காதரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்(27.05.2009) நாளை புதன்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திராயன் குறிச்சி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(2597- இ-18)


# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் “3A, 2AB” சித்தி பெற்ற வலிகாம கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -09.05.2009

## வட்டு. இந்துக் கல்லூரி




854




855

## சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்




856




857

துணிச்சலே எல்லா நற் குணங்களுக்கும் அதி நாயகன். அதில் நாம் வலிமையோடு தங்கு தடையின்றி முன்னேறிச் செல்ல வேண்டும்.

– வினோபா பாவே

**வலம்புரி**

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வைகுந்தவாசனின் துணிச்சல் தேவை

இலங்கையில் தமிழர்களின் வாழ்வு மிகப் பெரும் அவலத்தில் சிக்கியுள்ளது.

உயிரழிவு, சொத்தழிவு என்பதற்கு மேலாக எதிர்காலம் இருண்டுவிட்டதென்ற ஏக்கமும் உளவியல் ரீதியான தாக்கமும் தமிழினத்தை கசக்கிப் பிழிகிறது.

வன்னியில் நடத்த கொடூர யுத்தம்; அதனால் ஏற்பட்ட பேரழிவுகள், முகாம்களில் அடக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் பரிதாப நிலை எனத் துயரப்பட்டியல் நீண்டு செல்கிறது.

விடுதலைப் புலிகள் என இனங்காணப்பட்டதாக கூறப்படும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும், அவர்களின் உயிருக்கான உத்தரவாதம் என்ன? என்ற கேள்விகளுக்கு மத்தியில், இலங்கை நாடாளுமன்றத்தில் இருபத்திரண்டு ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகும்.

இருந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் ஏனோ தானோ என்ற நிலையில் இருப்பது போல வெளிநாடுகளில் தங்கியுள்ளனர்.

போர் நடைபெற்ற வன்னிப் பகுதியில் சிக்குண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் பாதுகாப்புக் குறித்து இறுதிநேரத்திலேயே கூட்டமைப்பினர் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தங்கள் பொறுப்பை மறந்து செயற்படுகின்றனரா என்ற வினா எழுகின்றது.

இதற்கு மேலாக இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. செயலரை சந்திக்கும் விடயத்தில் அரசு ஏமாற்றிவிட்டதாக கூட்டமைப்பு குறை கூறுகிறது.

இக் குறைபாட்டிற்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விமான நிலையத்தில் ஐ.நா. செயலரை சந்திப்பதென்பது சாத்தியமற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நினைத்திருந்தால், ஐ.நா. செயலர் வவுனியா நலன்புரி நிலையத்தை பார்வையிட்டபோது சந்தித்திருக்கலாம் அல்லது கண்டியிலுள்ள ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சந்தித்திருக்கலாம்.

இந்தச் சந்திப்புக்களை எல்லாம் கூட்டமைப்பினர் கைவிட்டுவிட்டு அரசைக் குறை கூறுவது அழகல்ல எனக் கூறியுள்ளார்.

கோத்தபாயவின் கருத்தில் சில உண்மைகள் இருப்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஐ.நா. செயலரைச் சந்திப்பதற்கான அத்தனை வழிமுறைகளையும் கூட்டமைப்பினர் முன்கூட்டியே கண்டறிந்திருக்க வேண்டும்.

அரசு அனுமதித்தால் சந்திக்கலாம் என்ற சோம்பலான மன நிலையில் எதுவுமே சாத்தியப்படமாட்டாது.

ஐ.நா. சபைக்குள் புகுந்து ஈழத்தமிழர் பிரச்சினையை கூறிய வைகுந்தவாசன் போன்ற தமிழ் பற்றாளர்களின் துணிச்சல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குத் தேவை.

தொடர்ந்தும் குறை கூறி குட்டிச்சுவராகும் பரிதாபம் வேண்டவே வேண்டாம். புத்திசாலித்தனத்துடன் செயற்படவேண்டும். இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் விடும் தாழ்மையான கோரிக்கை.

# மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும்

## பிரதம நீதியரசர் சரத் என் சில்வா



(கொழும்பு)

மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கினாலும் அவர்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான சட்ட உதவிகள் வழங்கப்படவேண்டுமென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

குருநாகல் உயர்நீதிமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதம நீதியரசர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் சட்டம் செயற்படாத இடத்துக்கு நான் அண்மையில் விஜயம் செய்திருந்தேன். வடக்கு கிழக்கிலுள்ள சில நீதிமன்றங்களில் விடுதலைப்புலிகளால் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

அந்த நீதிபதிகளை நீக்கிவிட்டு முக்கியமான பதவிகளுக்கு திறமை வாய்ந்த நீதிபதிகளை நான் நியமித்துள்ளேன். அந்தப் பகுதிகளில் தமிழ் நீதிபதிகளுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்கியுள்ளோம் என பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகள் எமது நாட்டைப் பற்றி மிகவும் தாழ்வான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளமை கவலையளிக்கிறது. எமது நாட்டைப்பற்றி பல்வேறு தொலைக்காட்சிகளில் பிழையான தகவல்கள் வெளியாகியுள்ளமையே அதற்கான காரணம் நீதிமன்றங்களை அபிவிருத்தி செய்ய வெளிநாடுகளிடம் நாங்கள் உதவி கோரினால் அவர்கள் அதற்கு இயலாதெனக் கூறுவதுடன் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குப் பணம் தருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறிருந்தும் பெற்றுக்கொண்ட நிதியுதவிகளிலிருந்தே யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டியிலுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளைக் கட்டியதாக பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

தற்பொழுது இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளுக்கு எம்மால் செல்ல முடியும். தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என நினைப்பதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்தப் பகுதிகளில் தமிழர்களை நாம் நீதிபதிகளாக நியமித்துள்ளோம்.

யாழ். நீதிமன்றமும் இலங்கையிலுள்ளதொரு நீதிமன்றம் என்ற எண்ணத்தை நாம் தோற்றுவித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

அதேநேரம் வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குத் தான் சென்றிருந்த போது முன்னாள் விடுதலைப்புலி போராளிகளைச் சந்தித்ததாகவும் கடந்த காலங்களில் ஏதாவது முறைப்பாடுகள் மேற்கொண்டுள்ளார்களா என அவர்களிடம் கேட்டதற்கு இல்லையெனப் பதில் வழங்கப்பட்டதாகவும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார். (ஓ-6)

# பாதுகாப்பு நடைமுறையில் மாற்றமில்லை தேவைப்படின் மேலும் அதிகரிக்கப்படும்

## பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் தேசிய பாதுகாப்பு கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் எவ்வித மாற்றங்களோ அல்லது தளர்வுகளோ ஏற்படுத்தப்படமாட்டாது என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

வடக்கிலிருந்து தப்பி வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொழும்பு உட்பட அதனை அண்டிய பிரதேசங்களில் ஊடுருவியிருக்கக்கூடும் என்பதால் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். தேவைப்படின் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டும் கொழும்பு உட்பட நாட்டின் அனைத் துப் பகுதிகளிலும் பொலிஸாரும் இராணுவத் தினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவ துடன் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கில் படையினரால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அவ் வியக்கத்தினர் அனைவரும் அழிக்கப்பட்டதுடன் அவ்வியக்கத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்கள் அனைத்துப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இருப்பினும் அவ்வியக்கத்திலிருந்து வந்து கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் ஊடுருவியுள்ளதாக பாதுகாப்புதரப்பினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அதனால் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பாதுகாப்பு தரப்பினரால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படமாட்டாது என்று தெரிவித்தார். (ஓ-6)

## முன்னாள் சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சாதாரண பிரஜைகள் போல வெளிக்கொணரப்படுவார்கள் என இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளால் பலவந்தமாக இணைக்கப்பட்ட பல சிறுவர் போராளிகள் குறித்து மோதலின் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கையில் கவனம் செலுத்தப்படுமென ஐ.நா. செயலாளர் பான்கீ மூனின் இலங்கை விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட இணைந்த அறிக்கையில் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

சிறுவர் போராளிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியாகக் கூறியுள்ளார்.

சரணடைந்தவர்கள் யுனிசெப் அமைப்பின் உதவியுடன் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சிறுவர் போராளிகளை புனர்வாழ்வளிப்பதற்கு யுனிசெப் அமைப்புடன் இணைந்து இலங்கை அரசாங்கம் ஏற்கனவே எடுத்திருக்கும் நடவடிக்கைகளை ஐ.நா. செயலாளர் வரவேற்றுள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### தன்னடக்கம்



அடக்கப்படாத மனம், நெறியில் செலுத்தப்படாத மனம் நம்மை என்றென்றும் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும் ; நம்மைக் கிழிக்கும் ; நம்மைக் கொல்லும் அடக்கப்பட்ட நெறியில் செலுத்தப்பட்ட மனமோ நமக்கு பாதுகாப்பளிக்கும் ; விடுதலையைத் தரும்.

இயற்கைக்கு ஒத்துவாழ்தல் என்பதன் பொருள் தேக்கமே , மரணமே. இவ் வீட்டை மனிதன் கட்டியது எப்படி? இயற்கைக்கு ஒத்து வாழ்ந்தா? அல்ல இயற்கையை எதிர்த்துப்போர் புரிந்தே. இயற்கையோடு புரியும் ஓயாத போரே மனித முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது ; அதனோடு ஒத்து வாழ்வதல்ல.

பிறரிடம் உள்ள தீய தன்மைகளை எண்ண வேண்டாம். அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.

# வன்னியில் சிங்களக் குடியேற்றம் சாத்தியமெனில் பாதிக்கப்பட்ட தமிழரை தெற்கில் குடியேற்ற தயாரா?

## இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண கேள்வி

(கொழும்பு)

பெரும்பான்மை சமூகத்தினரை வன்னியில் குடியேற்றுவதுதான் அரச தரப்பினரின் யோசனையாகவும் திட்டமாகவும் இருந்தால் அதனைத் தாராளமாகச் செய்யட்டும். அதே போல் இன்று நலன்புரி நிலையங்களிலே ஆதரவற்றவர்களாக இருக்கும் அப்பாவித் தமிழ் மக்களை தென்பகுதி அரச காணிகளில் குடியமர்த்தி அவர்களை நிறைவுள்ளவர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றதா? என்று இடதுசாரி முன்னணி கேள்வியெழுப்பியுள்ளது.

படையினரால் வெற்றி கொள்ளப்பட்டுள்ள வன்னிப் பெரு நிலப்பரப்பை அபிவிருத்தி செய்வதுடன் அங்கு சிங்களவர்களையும் குடியேற்றுவதே பொருத்தமானது என ஜாதிக ஹெல உறுமய கூறியிருக்கும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோதே இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், சுமார் மூன்று இலட்சம் மக்கள் இன்று வவுனியா நலன்புரி நிலையங்களிலே அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். உலகிலேயே இவ்வாறு அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தைப் பார்த்ததில்லை என்று அங்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கூறியிருக்கின்றார்.

ஐ.நா. செயலாளருக்கு காண்பிக்கப்பட்டது. மினிக்பாம் என்ற நலன்புரி முகாம் மட்டுமே ஆகும். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் கூட இந்த ஓரளவு வசதியுள்ள முகாமே காட்டப்படுகின்றது. இதனைப் பார்த்து விட்டே பான் கீ மூன் அப்படிக் கூறுபவராக இருந்தால் ஏனைய முகாம்கள் குறித்து பேசத் தேவையில்லை.

சகல சௌபாக்கியங்களுடன் வாழ்ந்த வன்னி மக்கள் தமது பழைய வாழ்க்கை முறைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையில் இருக்கின்றனர். அந்த அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டியதே முதலாவது கடமையாகும். அதற்கு முன்னர் தற்போதைய சூழ்நிலையில் அவர்களின் அடிப்படைத் தேவைகள் அநேகமானவை. அதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறானதோர் நிலைமையில் தான் அரசதரப்பில் ஒட்டிக் கொண்டுள்ள சிலர் வாய்க்கு வந்ததை பேசிக் கொண்டிருக்கின்றனர்.

வன்னியில் சிங்களக் குடியேற்றம் குறித்து ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது. இவ்வாறான யோசனைகள் முன்வைக்கப்படுகின்ற போதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரும் அரசாங்கம் என்ற வகையில் உரிய தரப்பினருடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்ததாகும். அப்படி இல்லாது தான் தோன்றித்தனமாக எதனையும் மேற்கொள்வது நல்ல பலனை தந்து விடப் போவதில்லை.


சிங்களவர்களை வன்னியில் குடியேற்றுவதற்கு யோசனைகள் முன்வைக்கப்படுவதாக இருந்தால் இன்று வவுனியா நலன்புரி நிலையங்களிலே தங்கியிருக்கும் ஒரு பகுதியினரை தென் பகுதியில் குடியேற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றதா எனக் கேட்க விரும்புகிறேன்.

அப்படியானால் கொழும்பிலே இருக்கின்ற அரச காணிகள், கோட்டே பாராளுமன்றத்தை சுற்றி இருக்கின்ற அரச வெற்று நிலங்களில் அடுக்குமாடி வீட்டுத்திட்டங்களை அமைத்து வன்னித் தமிழர்களை குடியேற்ற வேண்டும். இதற்கு விகாரைகளுக்கு சொந்தமான காணிகளையும் வழங்குவது சிறந்ததாகும்.

வன்னிக்குச் செல்ல சிங்களவர்கள் விரும்புகின்றனரா என்பது தெரியாது. ஆனால் துன்பத்தில் துவண்டு கொண்டிருக்கும் வன்னித் தமிழ் மக்கள் கொழும்பில் நிரந்தரமாக்கப்படுவதை நிச்சயமாக விரும்புவர்.

1970 காலப் பகுதியில் வடக்கு உட்பட தமிழ் மொழி மூலப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தென் பகுதி பல்கலைக்கழகங்களில் அனுமதி மறுக்கப்பட்டதையடுத்தே அன்றைய இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டது. அப்படியொரு யுகம் மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதில் சகலரும் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே இடதுசாரி முன்னணியின் வேண்டுகோளாகும் என்றார். (ஓ-6)

## புரட்சிக்கு தயாராகுமாறு தொண்டர்களுக்கு நேபாள முன்னாள் பிரதமர் பிரசண்டா அழைப்பு



(காத்மண்ட்)

புரட்சிக்கு தயாராகும் படி தனது தொண் டர்களுக்கு நேபாள முன்னாள் பிரதமர் பிரசண்டா அழைப்பு விடுத்துள்ளார். நேபாளத்தில் மன்னராட்சி முடிந்த பின் மாவோயிஸ்டுகள் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தனர். மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா பிரதமரானார். மாவோயிஸ்ட் தொண்டர்களை இராணுவத்தில் சேர்க்கும்படி இராணுவ தளபதி ருக்மாங்கதனுக்கு பிரசண்டா உத்தர விட்டார்.

ஆனால், இவரது உத்தரவை இராணுவ தளபதி ஏற்கவில்லை. இதையடுத்து. இராணுவ தளபதியை பதவியிலிருந்து நீக்கம் செய்தார் பிரசண்டா. இராணுவ தளபதியை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை. எனவே, ருக்மாங்கதன் பதவியில் தொடரலாம் என நேபாள ஜனாதிபதி ராம்பரன் யாதவ் உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் உத்தரவால் கடுப்பாகி போன பிரதமர் பிரசண்டா பதவி விலகினார். நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாதவகுமார் நேபாள் புதிய பிரதமராகியுள்ளார்.

இதற்கிடையே தனது தொண்டர்களிடையே பேசிய பிரசண்டா குறிப்பிடுகையில், “போர் இன்னும் ஓயவில்லை. போரின் தந்திரத்தை தான் மாற்றியுள்ளோம். எனவே புரட் சிக்கு தயாராக இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நேபாள பாராளுமன்றில் மொத்தமுள்ள 601 இடங்களில் 275க்கும் அதிகமான இடங்களைப் பெற்றுள்ளனர். மாவோயிஸ்டுகள் பிரசண்டாவின் இந்தப் பேச்சால் நேபாளத்தில் குழப்ப நிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

## நித்திய இளைப்பாற்றி திருப்பலி



**அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன்**

*அமரர் அருட்தந்தை ததேயூஸ் சறத்ஜீவன்* அடிகளாருக்கு நித்திய இளைப்பாற்றி வேண்டி ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் எம்மோடு இணைந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**நாள் : 26.05.2009 செவ்வாய்க்கிழமை**

**நேரம்: மாலை 4.30 மணி**

**இடம்: புனித மரியாள் பேராலயம், யாழ்ப்பாணம்.**

**05, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் குடும்பத்தினர்.**

(2774)

## இரங்கல் திருப்பலி



18.05.2009 அன்று கிளிநொச்சியில் மரணமடைந்த

**அருட்தந்தை M.T சறத்ஜீவன்**

அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக இரங்கல் திருப் பலி 26.05.2009 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரையும் இத் திருப்பலியில் கலந்து அவருக்காக செபிக்க அழைக்கின்றோம்.

**குரு முதல்வர்**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்**

(C-2503)

## அன்னையின் அருள்பெற்ற ஜெகவதனராசா அம்மையார்



ஆண்டவன் பணியை தன் பணியாகக் கொண்டு “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்ற உண்மையை மக்களாகப் பிறந்த அனைவரும் உணரவேண்டும் என்ற எண்ணத்துடன் சமயச்சொற்பொழிவு, ஆலயப் பணிகள், பண்ணிசைப் பாடல்கள் என்பவற்றின் ஊடாக தெய்வ நற்பணி புரிந்து வரும் திருமதி க.ஜெகவதனராசா அம்மையார் ஊஞ்சல்பாட்டு இயற்றுவதிலும் வல்லவர்.

நோய்வாய்ப்பட்டு மரணத்தின் விளிம்பிலே நின்று, மூன்றாண்டு காலமாக மரணத்துடன் போராடி அம்பாளின் அருளால் மார்க்கண்டேயரைப் போல உயிர்பிழைத்த இவ் அம்மையாரின் இறைபணியை இன்றைய சமுதாயம் என்றும் மறக்கமாட்டாது.

59 ஆவது அகவையை அடையும் சமய ஆசிரியையான கருணைக் கடலான ஜெகவதனராசா அம்மையார் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தும் அறப்பணியை தொடர்ந்து செய்ய அம்பாள் அருள் பாலிக்க வேண்டுமென வேண்டி, அம்மையாரின் அறப்பணி நீடுழி வளர்க என வாழ்த்துகிறோம்.

அம்மையாரை வாழ்த்தும்

**வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மக்களும் ஆதீனகர்த்தாவும் குருக்கள்மாரும்**

(C-2501)

## கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் திருமதி ப.கேதீஸ்வரனின் அன்புத் தந்தை

***அமரர் பொன்னையா முத்துக்குமாரு***

**(சமாதான நீதவான்)**

அவர்களது மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்**

**பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(2771)





ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடரில் நேற்று முன்தினம் ஜோகனஸ் பேர்க்கில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனான டெக்கான் சார்ஜர்ஸ் அணியினர் வெற்றியைக் கொண்டாடுவதை படங்களில் காணலாம்.

# ஐ.பி.எல். தொடரில் அதிர்ச்சி; 20 ஆயிரம் கோடி சூதாட்டம்

(புதுடில்லி)

ஐ.பி.எல். தொடரில் கொடி கட்டிப்பறந்த கிரிக்கெட் சூதாட்டம் இறுதிப் போட்டியில் உச்சத்தை தொட்டுள்ளது. இறுதிப் போட்டிக்கு மட்டும் ரூபாய் 20ஆயிரம் கோடிக்கும் மேல் சூதாட்டம் நடந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடர் நடந்தது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ்,கிங்ஸ் லெவின் பஞ்சாப் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்றன.

போட்டிகள் வெளிநாட்டில் நடத்தப்பட்டது, தேச உணர்வு இல்லாதது, ஐ.சி.சி. ஊழல் தடுப்பு கண்காணிப்பின் கீழ் ஐ.பி.எல். தொடர் இடம் பெறாதது போன்ற காரணங்களால் சூதாட்டம் படுஜோராக அரங்கேறியுள்ளது.

வெற்றிபெறும் அணி, அதிக சிக்ஸர் அடிக்கும் வீரர் என போட்டியின் ஒவ்வொரு அசைவு தொடர்பாகவும் சூதாட்டம் நடந்துள்ளது. 59 போட்டிகளுக்கு ஒட்டுமொத்தமாக ரூபாய் 25 ஆயிரம் கோடி வரை சூதாட்டம் நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

### சென்னை முன்னிலை

பொதுவாக கிரிக்கெட் சூதாட்டத்தில் ரூபாய் 100 செலுத்தினால் ரூபாய் 200 தரப்படும். அதாவது நீங்கள் கணித்த அணி வென்றால் ரூபாய் 200 கிடைக்கும். ஒரு வேளை தோல்வி அடைந்தால் 100 ரூபாயை இழக்க வேண்டியிருக்கும். கடந்த முறை கோப்பை வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ், இரண்டாம் இடம் பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மீது தான் இம்முறை அதிகளவில் ரசிகர்கள் பணம் கட்டினர்.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன் பட்டம் வெல்லும் என்று ஆயிரம் ரூபாய் கட்டினால் ரூபாய் 4 ஆயிரத்து 300 வரை தரப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அரையிறுதியோடு வெளியேறிவிட்டது. ராஜஸ்தான் றோயல்ஸும் வெளியேற சூதாட்ட முகவர்கள் அதிகலாபம் அடைந்துள்ளனர்.

### திடீர் அணிகள்

எதிர்பார்த்த அணிகள் எல்லாம் ஏமாற்றிய நிலையில், டெக்கான் மற்றும் பெங்களூர் அணிகள் திடீர் என எழுச்சி பெற்றது அனைவருக்கும் ஆச்சரியம் அளித்தது.

கடந்த முறை டெஸ்ட் அணி என்று வர்ணிக்கப்பட்ட பெங்களூர் இம்முறை சென்னையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு காலடி எடுத்து வைத்தது.

அதேபோல் 2008 தொடரில் லீக் சுற்றில் கடைசி இடம் பெற்ற டெக்கான் அணி இம்முறை சம்பியனானமை அதிர்ச்சி தந்தது. யாருமே எதிர்பாராத டெக்கான்-பெங்களூர் அணிகள் மோதும் இறுதிப் போட்டிக்கு சூதாட்ட பிரியர்கள் மத்தியில் அதிக ஆர்வம் காணப்பட்டது.

அணித் தலைவர் கில்கிறிஸ்ட் அதிரடி கைகொடுக்கும் என நம்பி ஏராளமானோர் டெக்கான் அணி மீது பணம் கட்டியுள்ளனர். கும்ளே சாதிப்பார் என்று பெங்களூர் அணி மீதும் கணிசமான ரசிகர்கள் பணம் செலுத்தியுள்ளனர்.

இறுதிப் போட்டிக்குமட்டும் 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான சூதாட்டம் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

கோப்பையை யார் வென்றாலும் சூதாட்ட முகவர்கள் காட்டில் மழைதான்.

# சிக்ஸர் நாயகன் கில்கிறிஸ்டுக்கு தொடர்நாயகன் விருது

(சென்னை)

தென்னாபிரிக்காவில் நடந்த 2ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தொடக்கத்திலிருந்தே கில்கிறிஸ்ட் அதிரடியாக விளையாடினார்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவரான அவர் இந்த ஐ.பி.எல். போட்டியில் ரசிகர்களுக்கு விருந்து படைத்தார்.

அதிக ஓட்டங்கள் குவிப்பில் கில்கிறிஸ்ட்டுக்கு 2ஆவது இடம் கிடைத்தது. அவர் 16 ஆட்டத்தில் 495 ஓட்டங்கள் குவித்தார். அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற பெருமை அவருக்கு கிடைத்தது. 29 சிக்ஸர்கள் அடித்து முத்திரைபதித்தார்.

இதனால் கில்கிறிஸ்டுக்கு தொடர் நாயகன் விருது கிடைத்தது.

இறுதிப் போட்டியில் 4 விக்கெட்டைக் கைப்பற்றிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித் தலைவர் கும்ளே ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

அதிக ஓட்டங்கள் எடுத்த சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் மத்யூ ஹைடனுக்கு ஓரேஞ்ச் நிற தொப்பியும் அதிக விக்கெட் கைப்பற்றிய டெக்கான் சார்ஜர்ஸ் வீரர் ஆர்.பி. சிங்குக்கு பேர்ப்பிள் நிற தொப்பியும் கிடைத்தது.

ஹைடன் 12 ஆட்டத்தில் விளையாடி 572 ஓட்டங்கள் குவித்தார். 5 அரைச்சதம் அடித்தார். ஆர்.பி.சிங். 16 ஆட்டத்தில் 23 விக்கெட் கைப்பற்றினார்.

இந்த ஐ.பி.எல். போட்டியில் மத்யூ ஹைடன், கில்கிறிஸ்ட், சுரேஸ் ரெய்னா, கும்ளே, ரோகித் சர்மா, ஆர்.பி.சிங், டில்சான், யூசுப்பதான், நெகரா, மலிங்க ஆகியோர் ஜொலித்தார்கள்.

கிரேம் சுமித், பீற்றர்சன், பிளின்டொப், ஜெயசூரியா, காம்பீர், உத்தப்பா, ஜேக்கப் ஓரம், அஜந்த மெண்டிஸ் போன்ற முன்னணி வீரர்கள் சரிந்து விட்டார்கள்.

## துடுப்பாட்டத்தில் அசத்தியவர்கள்

| வீரர்கள் | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஆட்டமிழப்பில்லை | ஓட்டங்கள் | அதிக ஓட்டங்கள் | சராசரி | ஓட்டவிகித சராசரி | 100 | 50 | 0 | நான்கு | ஆறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்யூ ஹைடன் (சென்னை) | 12 | 12 | 1 | 572 | 89 | 52.00 | 144.81 | 0 | 5 | 0 | 60 | 22 |
| கில்கிறிஸ்ட் (டெக்கான்சார்ஜர்ஸ்) | 16 | 16 | 0 | 495 | 85 | 30.93 | 152.30 | 0 | 3 | 2 | 54 | 29 |
| டி வில்லியர்ஸ் (டில்லிடேர்டேவில்ஸ்) | 15 | 13 | 4 | 465 | 105* | 51.66 | 130.98 | 1 | 3 | 1 | 39 | 12 |
| சுரேஷ் ரெய்னா (சென்னை) | 14 | 14 | 0 | 434 | 98 | 31.00 | 140.90 | 0 | 2 | 0 | 37 | 21 |
| டில்சான் (டில்லிடேர்டேவில்ஸ்) | 14 | 13 | 3 | 418 | 67* | 41.80 | 122.58 | 0 | 4 | 0 | 42 | 13 |





## பந்துவீச்சில் சாதித்தவர்கள்

| வீரர்கள் | போட்டிகள் | ஓவர்கள் | ஓட்டமற்றஓவர் | வழங்கிய ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | சிறந்த பந்து வீச்சு | சராசரி | ஓட்டவிகித சராசரி | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆர்.பி.சிங் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 16 | 59.4 | 1 | 417 | 23 | 4/22 | 18.13 | 06.98 | 1 | 0 |
| கும்ளே (பெங்களூர் றோயல்) | 16 | 59.1 | 1 | 347 | 21 | 5/5 | 16.52 | 05.86 | 1 | 1 |
| அசித் நெகரா (டில்லி டேர்டேவில்ஸ்) | 13 | 51.0 | 1 | 346 | 19 | 3/27 | 18.21 | 06.78 | 0 | 0 |
| மலிங்க (மும்பை இந்தியன்ஸ்) | 13 | 49.3 | 2 | 312 | 18 | 3/11 | 17.33 | 06.30 | 0 | 0 |
| பிரஜன் ஓஜா (டெக்கான் சார்ஜர்ஸ்) | 15 | 53.3 | 0 | 348 | 18 | 3/21 | 19.33 | 06.50 | 0 | 0 |

## கனரக...

நடைபெற்ற போரில் கனரக ஆயுதங்களின் பாவனைக்கான தெளிவான ஆதாரங்களை நான் காணவில்லை. இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நிலை கண்டு நான் மிகுந்த கவலையடைந்துள்ளேன்.

நான் உலகம் முழுவதிலுமுள்ள இதனை ஒத்த பகுதிகளுக்கு பயணங்களை மேற்கொண்டுள்ளேன். ஆனால் இங்கு கண்டதைப் போல நான் எங்கும் கண்டதில்லை.

பலர் தமது உறவுகளை இழந்துள்ளனர். இது ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை என்றார் அவர். (ச-5)

## பத்மநாதனை...

விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதனை கைது செய்து நாடு கடத்துவதற்கும் ஏனைய நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களை கைது செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உதவிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஐ.நாவின் செயலாளர் நாயகத்திடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# பிரபாகரனின் மரணச் செய்தி கேட்டு கண்ணீர் விட்டு கதறி அழுதார் நளினி

## தமிழகச் செய்திகள் தெரிவிப்பு

(வேலூர்)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இராணுவ தாக்குதலில் மரணம் அடைந்ததாக தகவல் அறிந்ததும்,வேலூர் பெண்கள் சிறையில் உள்ள நளினி கண்ணீர் விட்டு கதறியழுததாக சிறை காவலர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தமிழகத்தில் வெளியான செய்தி வருமாறு,

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தண்டனை காலம் முடிந்த பிறகும், இவர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இந்நிலையில், இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நடந்த போர் முடிந்து விட்டதாகவும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், அவர் மகன் மற்றும் குடும்பத்தினர் இராணுவத்தினரால் சுட்டு கொல்லப்பட்டதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

பிரபாகரன் இறந்த செய்தியை கேட்டதும் வேலூர் பெண்கள் சிறையில் இருக்கும் நளினி மிகவும் வருத்தத்தில் இருப்பதாகவும், அடிக்கடி அழுது புலம்பிக் கொண்டிருப்பதாகவும் சிறை காவலர்கள் தெரிவித்தனர்.

நளினியின் மகள் அரித்திரா, கனடா நாட்டில் படித்து வருகிறார். பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து,“ தன் மகள் அரித்திராவுக்கும் ஆபத்து வருமோ” என்ற பயத்தில் அவர் இரவில் தூக்கமின்றி தவிப்பதாகவும், “கடவுள்தான் தன் மகளை காப்பாற்ற வேண்டும்” என அடிக்கடி கூறி வருவதாகவும் சிறை காவலர்கள் கூறினர்.

ராஜிவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் ஆண்கள் சிறையில் இருக்கும் நளினியின் கணவர் முருகன் மற்றும் சாந்தன், பேரறிவாளன் ஆகியோரும் பிரப்பாகரன் மறைவு செய்தியால் மிகுந்த துக்கத்தில் இருப்பதாகவும், மத்தியில் காங்



கிரஸ் ஆட்சி மீண்டும் அமைந்துள்ளதால், இனி தங்களுக்கு விடுதலை கிடைக்காது எனவும் கூறி வருவதாக ஆண்கள் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரபாகரன் மறைவுக்கு பிறகு, சிறையில் இருக்கும் ராஜிவ் கொலையாளிகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் மத்திய உளவு நிறுவனமான ஐ.பி., கண்காணித்து வருகிறது. அவர்களை சந்திக்க வருபவர்கள் கடுமையான விசாரணைக்கு பிறகு அனுமதி வழங்கப்படுவதாக சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-1)

## இலங்கைக்கு ஆதரவாக...

இணைந்து செயற்படுகின்றன.

சுவிஸ்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவாவில் இன்று நடைபெறவுள்ள மனித உரிமை சபையின் சிறப்பு விவாதத்தில் இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் பிரித்தானியாவும் டென்மார்க்கும் தீவிரமாகவுள்ளன.

இலங்கைக்கு எதிரான விவாதத்தை மேற்கொள்ளும் பொருட்டு 17 நாடுகளின் ஆதரவுகளை டென்மார்க் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

விவாதம் மேற்கொள்ளப்படவேண்டும் எனில் குறைந்தது 16 நாடுகளின் ஆதரவுகளாவது தேவை.

வன்னிப் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. சபை தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்தே இந்த விவாதம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஆனால் தனது நட்பு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, கியூபா, எகிப்து, சவுதிஅரேபியா, நிக்கரகுவா, பொலிவியா ஆகிய நாடுகளின் ஆதரவுகளுடன் இந்தத் தீர்மானத்தை முறியடிக்கப்போவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவிலும் கனடாவிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்வதால் அவர்கள் இலங்கைக்கு எதிரான தீவிரப் போக்கை கொண்டுள்ளனர்.

மோதல்களில் படையினர் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை படுகொலை செய்ததாக அவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## முகாம் மக்களின் எதிர்...

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரமாகவே தாம் வாழ விரும்புவதாகவும் அகதி முகாமிலுள்ள பொதுமக்கள் தெரிவிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் வவுனியா தடுப்பு முகாமுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் அவருடன் சென்றிருந்த ‘த ரைம்ஸ்’ செய்தியாளர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

மனிக்பாம் முகாமை, முகாம் என்பதை விட சிறை அல்லது காட்சிக்கூடம் என்றே அழைக்க வேண்டும் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் இராணுவத்தினர் மத்தியிலும் கூடாரங்களாக அமைக்கப்பட்டுள்ள பதுங்கு குழிகளுக்கு நடுவிலும் சிக்கி மக்கள் பரிதவிக்கின்றனர்.

அதேவேளை, மக்கள் அங்கிருந்து வெளியேற அனுமதி மறுக்கப்படுவதாகவும் முட்கம்பிகளுக்கு இடையில் மக்கள் வாழ்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் இணைப்பாளர் ஜெர்சன் பராண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை உலகிலேயே மிகப்பெரிய தடுப்பு முகாம்களில் ஒன்றான வவுனியா மனிக் பாம் முகாமில் 2இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது எதிர்பார்ப்புகள் தகர்க்கப்பட்டு முட்கம்பிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் த ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் அமைக்கப்பட்ட முகாம்கள் தொடர்பில் புத்தகங்களில் தாம் படித்துள்ளதாகவும் மனிக்பாம் முகாம்களை பார்க்கும்போது அவற்றை மீண்டும் நேரடியாக உணர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அங்குள்ள இளைஞர்கள் முன்வந்து உண்மையை சொல்ல முற்பட்டால் அவர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது என முகாமில் உள்ளவர்கள் தெரிவித்ததாகவும் முகாம்களின் மக்கள் உணவோ சுத்தமான நீரோ இன்றி மிகவும் அவதிப்பட்டு வருவதாகவும் த ரைம்ஸ் செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## இயல்பு நிலை திரும்...

செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது இலங்கையில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் அங்கு இயல்புநிலை திரும்பும் நிலையில் தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்களா என்று செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சிதம்பரம், சகஜ நிலை திரும்பினால் சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்ல அகதிகளே ஆர்வமாக இருப்பார்கள் என்றும் இலங்கையில் இயல்பு நிலை திரும்பும் போது அகதிகள் கண்டிப்பாகத் திரும்பிச் செல்வார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இய்க்கத்தின் தலைவர் கொல்லப்பட்டது தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வெளிவருவது குறித்த கேள்விக்கு பதிலளித்த சிதம்பரம், இலங்கை அரசே அதை உறுதிப்படுத்தி விட்ட நிலையில் பிரபாகரன் மரணம் தொடர்பாக ஐயப்பாடுகளை எழுப்பத் தேவையில்லை என்று தெரிவித்தார்.

தமிழகக் கடலோரப் பகுதிகள் வழியாக விடுதலைப்புலிகள் ஊருடுவ வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளித்த சிதம்பரம், அது தொடர்பாக தமிழக அரசுக்கு உரிய அறிவுறுத்தல்களை மத்திய அரசு வழங்கியிருப்பதாகவும் மாநில அரசும் அதை ஏற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியிருப்பதால் ஊடுருவல் நடைபெற வாய்ப்பில்லை என்று தெரிவித்தார். (ச)

## கப்பல்...

இடம்பெறும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இக்கப்பல் சேவையில் பயணிக்கவுள்ளவர்களை இன்று காலை யாழ் புகையிரத நிலையத்திற்கு வருகைதருமாறு அவர் கேட்டுள்ளார். சீரற்ற காலநிலை காரணமாக கப்பல் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## பத்தாயிரம் விடுதலைப்...

முன்கள வீரர்கள் 2 ஆயிரத்து 65 பேர் தாமாக முன்வந்து சரணடைந்தனர்.

ஈழத்துக்காகத் தாம் போரிடவல்ல, தலைவர்கள் உயிரை காப்பாற்றவே தம்மை முன்னால் நிறுத்தியுள்ளனர் என்பதை உணர்ந்து அவர்கள் சரணடைந்தனர்.

கடைசிக் கட்டத் தாக்குதல் நடந்தபோது பொதுமக்களுடன் சேர்ந்து 2 ஆயிரத்து 379 விடுதலைப் புலிகள் ஊடுருவி இருந்தனர்.

விசாரணை நடந்தபோது அவர்களும் சரணடைந்தனர். மொத்தத்தில் 10 ஆயிரம் விடுதலைப் புலிகள் எமது இராணுவத்திடம் சரணடைந்துள்ளனர்.

இவர்களில் 202 விடுதலைப் புலிகள் எல்லா வகை ஆயுதங்களையும் பயன்படுத்த நன்கு பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

கரும்புலிகளும் சரணடைந்துள்ளனர். அதிக பயிற்சிகளுடன் தீவிர உறுப்பினர்களாக இருந்தவர்கள் தனித்தனி இடங்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

7 ஆயிரத்து 237 விடுதலைப் புலிகள் பல்வேறு முகாம்களில் மறுவாழ்வு பணிக்காக வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 600 பேர் பெண் மற்றும் சிறுவயதுப் புலிகளும் இனம்காணப்பட்டு முகாம்களில் பிரிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தீவிர போர் ஆரம்பமானது. அன்று முதல் போர் முடிபதற்குள் 22 ஆயிரம் விடுதலைப் புலிகள் பலியாகியுள்ளனர்.

இராணுவத் தரப்பில் 6 ஆயிரத்து 261 பேர் பலியானார்கள். 29 ஆயிரத்து 551 பேர் காயமடைந்தனர். இவர்களில் 2 ஆயிரத்து 556 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஊனமடைந்துவிட்டனர். பொதுமக்களில் ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

போர் காரணமாக தமிழர்களில் 2இலட்சத்து 71 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 29 இடங்களில் முகாம்கள் அமைத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர். இனி இலங்கை வடக்குப் பகுதியில் சீரமைப்புப் பணிகள் தொடங்கும்.

அதுவரை அவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பார்கள். முகாம்களில் அவர்களுக்குத் தேவையான எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-5)


## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் சிவரஞ்சினி என்பவரது தேசிய அடையாள அட்டை (515916798V) கடந்த 14 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 2ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

தொடர்பு:-T.P.:-0779352418

(C-2505)


## வடக்கில் 11 வருடங்...

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் அவரது அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உயர்அதிகாரிகள் பலரும் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலின் பின்னர் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாணத்தில் இறுதியாக கடந்த 1998 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் அங்கு நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக எந்தத் தேர்தல்களும் நடைபெறவில்லை.

எனினும் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வட மாகாண மக்களுக்கு 11 வருடங்களின் பின்னர் மீண்டும் தமது அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இவ்விரு உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வட மாகாணத்தில் ஒரு மாநகர சபை, 5 நகர சபைகள் மற்றும் 28 பிரதேச சபைகள் உட்பட 34 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது என்றும் இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிந்திக் கிடைத்த தகவலின்படி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.